குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.128/2020

அ.சா. 1

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | தொழில் | |
| கணவர் பெயர் | கண்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.53 மணி,

Accused A2.Manikandan present. A1.Chinnapaiyan S/o.Arumugam died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் வ.உ.சி நகரில் குடியிருந்து, அரசு பள்ளியில் தலைமை ஆசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.03.2019 ஆம் தேதி இரவு நான் வீட்டின் உள்ளே ஹாலில் இருந்த சோபாவில் படுத்துக்கொண்டிருந்தேன். எனது கணவர் வீட்டின் போர்டிகோவில் கட்டில் போட்டு படுத்திருந்தார். அப்போது வெயில் காலமாக இருந்ததால், வீட்டின் வாசற்கதவை திறந்து வைத்துவிட்டு, தூங்கிக்கொண்டிருந்தோம்.

2. இரவு சுமார் 01.00 மணியளவில் எனது கணவர் வீட்டிற்கு உள்ளே சென்று படுத்துவிட்டார். நான், சோபாலிலேயே தூங்கிக்கொண்டிருந்தேன். இரவு சுமார் 01.30 மணியளவில் எனது கழுத்தில் ஏதோ நெருடுவது போல் இருந்தது. நான் தூக்கத்தில் தட்டிவிட்டு விட்டு மீண்டும் தூங்கிவிட்டேன். மீண்டும் என் கழுத்தில் இருந்து வேகமாக இழுத்தபோது, நான் கண்விழித்து பார்த்தபோது ஒரு நபர் முகத்தை துணியால் மூடிக்கொண்டு அவரது கண் மட்டும் தான் வெளியே தெரிந்தது.

3. அந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடி அதில், காசு மற்று குண்டு ஆகிவற்றோடு சேர்த்து அணிந்திருந்ததை இழுத்தார். அவர் இழுத்த வேகத்தில் சோபா சாய்ந்துவிட்டது. நான் திருடன் என்று சத்தம் போட்டேன். அந்த நபர் செயினை

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:01:36 +0530

பறித்துக்கொண்டு சென்றுவிட்டார். சத்தம் கேட்டு எனது கணவர் வந்தார். நானும், கீழே இருந்து எழுந்தேன். நாங்கள் இருவரும் வெளியே சென்று சத்தம் போட்டு பார்ப்பதற்குள்ளாக செயினை பறித்த நபர் அங்கிருந்து சென்றுவிட்டார். அக்கம் பக்கம் தேடிப்பார்த்தும். அந்த நபரை கண்டுபிடிக்கமுடியவில்லை.

4. என் கழுத்தில் இருந்து அந்த நபர் பறித்துச்சென்ற தாலி, தங்ககாசுகள், குண்டு ஆகியவற்றுடன் கூடிய தாலிக்கொடியின் எடை சுமார் 8 பவுன் இருக்கும். சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்களும் வந்தார்கள். அனைவரும் சேர்ந்து தேடிப்பார்த்தும நகை பறித்த நபரை கண்டுபிடிக்க முடியவில்லை. நாங்கள் ஓமலூர் காவல்நிலையத்திற்கு போன் மூலம் தகவல் சொன்னோம்.

5. போலிசார் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். வீட்டை சுற்றிப்பார்த்தார்கள். நகையை பறித்த நபர் எங்கள் வீட்டு காம்பவுண்டடை தாண்டி குதித்த இடத்தில் அந்த நபரின் காலடி தடம் இருந்தது. போலிசார் அதை பார்த்தார்கள். அதன்பின்பு 27.03.2019 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு காவல்நிலையத்தில் இதுசம்மந்தமாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

6. பின்பு, போலிசார் தேடி கண்டுபிடிப்பதாக சொன்னார்கள். பின்பு சுமார் 6 – 7 மாதங்கள் கழித்து என்னை போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். நான் காவல்நிலையம் சென்றேன். அங்கு போலிசார் எனது நகையை கண்டுபிடித்தாகவும், அதனை அடையாளம் காட்டுமாறும் சொன்னார்கள். நான் காவல்நிலையத்தில் இருந்த எனது நகையை அடையாளம் காட்டினேன்.

7. பின்பு, நீதிமன்றத்தில் மனு செய்து எனது நகையை பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தாலிக்கொடி, தாலி, தங்ககாசுகள், குண்டு ஆகியவை என்னுடைய நகைகள் தான். அவற்றை தான் நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டேன். ( **அந்த புகைப்படம் எண்ணிக்கை 3 அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.17 18:01:40 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

8. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் தான் என்னுடையது என்றாலும், அதில் உள்ள சங்கதிகளை நான் எழுதவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக திருடுபோன 6 1/2 பவுன் தங்க ஆபரணங்களின் இரசீது, அதன் வடிவம் குறித்து புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

9. நான், புகார் கொடுத்த அன்று தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன் என்றால் சரி. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் உள்ள சோபாவிற்கும், வீட்டின் காம்பவுண்ட் சுவருக்கு சுமார் 10 மீ தூரம் இருக்கும். வீட்டின் காம்பவுண்ட் சுவர் ஒரு திசையிலும் வீட்டின் கதவு ஒரு திசையிலும் அமைந்துள்ளது என்றால் சரி. சம்பவத்தின்போது நானும், எனது கணவரும் தவிர்த்து வீட்டில் வேறு யாரும் இல்லை என்றால் சரி.

10. தினமும் இரவு 09.30 மணிக்கு நானும் எனது கணவரும் தூங்கச் செல்வோம் என்றால் சரி. சம்பவத்தின்போது, எத்தனை மணி இருக்கும் என்றால் 1 1/2 மணி இருக்கும். பொதுவாக எங்கள் வீட்டிற்கு அருகில் இரவு சுமார் 01.30 மணியளவில் இரயில் செல்லும், அதனடிப்படையில் நான் நேரத்தை கணக்கிட்டு சொன்னேன்.

11. எனது வீட்டின் பின்பகுதிக்கும், ரயில்வே தண்டவாளத்திற்கும் சுமார் 10 நிமிடங்கள் நடந்து கடக்கக்கூடிய தூரம் இருக்கும். முதல் விசாரணையில் எங்கள் வீட்டி காம்பவுன்ட் சுவரை ஏறி குதித்தவரின் கால்தடம் பதிந்திருந்ததாக நான் கூறியுள்ள நிலையில் அது ஒருவரின் கால்தடம் என்றால் சரி. எங்கள் வீட்டி காம்பவுன்ட் சுவருக்கும், வாசலுக்கும் இடையே இரும்பு கதவு போடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி இரும்பு கதவின் அளவு என்னால் தற்போது சொல்லமுடியாது.

12. சம்பவம் நடந்த உடன் எனது கணவர் அறையிலிருந்து எங்கள் வீட்டில் உள்ள நான் படுத்திருந்த ஹாலுக்கு வந்தார். சம்பவம் நடந்தவுடன் நான் சோபாவிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். சோபா சாயவில்லை. நானும், எனது கணவரும் வீட்டிற்கு வெளியே சென்று சம்பவத்தில் ஈடுபட்ட நபரை தேடச்சென்றபோது, அவர் காம்பவுன்ட் சுவரை தாண்டி வெளியே சென்று விட்டார்.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.17 18:01:44 +0530

13. எங்கள் வீட்டிற்கும், மஞ்சுவின் வீட்டிற்கும் இடையே சுமார் 15 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரி. நான் சத்தம் போட்டவுடன் கோவிந்தன், கமலா, செல்வி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். எதிரிகள் எங்கள் வீட்டிலிருந்து வெளியே சென்றபோது, நாங்கள் அனைவரும் அவர்களை துரத்திச் சென்றோம் என்றால் சரி. ஆனால், அவர்கள் எந்த திசையில் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

14. சம்பவத்தின்போது எத்தனை நபர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் ஒருநபர் வந்தார் என்று நினைக்கிறேன். எத்தனை நபர்கள் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது கழுத்தில் இருந்த நகை பறிக்கப்பட்டபோது ஒரு நபர் தான் இருந்தார். சம்பவம் நடந்த அன்று நான் பள்ளிக்கு செல்லவில்லை. விடுமுறை பெற்றுவிட்டேன். போலிசார் சம்பவத்தன்று என்னை விசாரித்தார்கள். அதன்பின்பு 3 முறை என்னை விசாரித்தார்கள்.

15. சம்பவம் நடந்து 6 மாதங்கள் கழித்து, நான் காவல்நிலையத்திற்கு சென்று நான் எனது நகைகளை அடையாளம் காட்டியபோது எதிரிகள் யாரும் காவல்நிலையத்தில் இல்லை என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.28 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:01:47 +0530